# நெஞ்சு பொறுக்குதில்லையே – நாவல் கூறும் விழுமியக்கூறுகள்

***வீ. திலகவதி***
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7717

## முன்னுரை

சொ. கலைவாணி சொக்கலிங்கம் எழுதிய “நெஞ்சு பொறுக்கதில்லையே” என்ற நாவலில் சமூகத்தில் பெண் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் இழைக்கப்படுகின்ற அநீதியையும், பெண்கள் எவ்வாறு துணிவுடன் இருக்க வேண்டும் என்பதை ஒரே குடும்பத்தில் இருக்கும் தாய் மகள் இருவரின் எண்ணப் போக்கின் வழியே காட்டி, நம் முன்னோர்கள் கடைபிடித்த ஒழுக்க நெறி அல்லது கற்பு நெறி விழுமியங்களைப் பற்றிக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கதை மாந்தர்கள்

மாரியப்பன் - வெள்ளையம்மாள் தம்பதியருக்கு வரிசையாய் நான்கு பெண்குழந்தைகள். யோகலட்சுமி, செல்வலட்சுமி, நம் கதையின் தலைமை கதாபாத்திரமான அன்னலட்சுமி, இளையவள் விஜயலட்சுமி, ஐந்தாவதாக ஆண்குழந்தை மாணிக்கம்.

## துணைக் கதை மாந்தர்கள்

அன்னத்தின் எதிர்வீட்டில் வசிக்கும் சுபாஷ்-லட்சுமி அவர்களின் குழந்தை அபி, அன்னம் வேலை செய்யும் ஒரு வீட்டின் தம்பதி சபேசன் - சகுந்தலா அன்னம் வேலை செய்யும் பெரிய வீட்டு பெண்மணி ஜானகி அம்மாள் அவர்களின் இளைய மகன் வக்கீல் பிரகாஷ், நான்காவது பெண் விஜயலட்சுமி வேலை செய்யும் கார்மெண்டஸ் சூப்பர்வைஸர் கிரிதரன்.

## கதைக் கரு

ஆணாதிக்கம் நிறைந்த உலகத்தில், தவறே செய்யாத பெண்கள், பெண் குழந்தைகள் படும் அவல நிலை, தம்பியே தவறு செய்தாலும் அதை மனதைரியத்துடன் தண்டனை கொடுக்கும் பெண்ணாக அன்னம் என்கிற கதாபாத்திரத்தை கருவாகக் கொண்டு படைக்கப் பட்டுள்ளது.

**கதைச் சுருக்கம்**

வெள்ளையம்மாள் - மாரியப்பன் தம்பதியருக்கு வரிசையாய் நான்கு பெண்குழந்தைகள். ஐந்தாவது குழந்தை வயிற்றில் இருக்கும் போதே இதுவும் பெண்ணாய் இருக்கும்மோ என்ற அச்சத்தில் அத்தனையையும் கரையேற்ற தன்னால் ஆகாது என்று அக்னிசாட்சியாய் வாழ்விலும் தாழ்விலும் உன்னைப் பிரியமாட்டேன் என வாக்களித்து மணமுடித்த மாரியப்பன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட, எப்படியும் தன் கணவன் தன்னைத் தேடி வருவான் என்ற நம்பிப்கையில் பூச்சூடி, நெற்றி நிறைந்த குங்குமத்தோடு காத் திருக்கும் மனைவி கோவில், குளம் என்று கடவுளை வணங்கி விரதம் இருந்து கடைசியாய் ஆண்குழந்தை பிறக்க, இந்த உலகத்தையே வென்றது போல் ஒரு கர்வத்தோடு இருக்கும் மாரியப்பன் மனைவி வெள்ளையம்மாள்.

வம்சத்தை பேர் சொல்லப் பிறந்தவன் விருத்தி செய்ய பிறந்த ஆண்பிள்ளையை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுகிறாள் தாய். தன் மகனை மகான் போல் வளர்க்க வேண்டும் என்பதற்காக, தான் செய்து வந்த வீட்டு வேலைகளைத் தன் மகள்களை செய்ய அனுப்புகிறாள். தாயின் அதிகப்படியான பாசம் மாணிக்கத்தைத் தவறான பாதையில் அழைத்துச் செல்கிறது. எதிர்வீட்டில் வசிக்கும் லட்சுமி தன் மாமியாரை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக, உடல் நலமில்லாத தன் ஒன்றை வயதுக் குழந்தை அபியை எதிர் வீட்டிலிருக்கும் வெள்ளளையம்மாள் அன்னத்திடம் ஒப்படைத்து விட்டுச் செல்கின்றாள். குழந்தை அபியை அன்ன லட்சுமி தன் வீட்டில் கட்டிலில் தூங்க வைத்துவிட்டு வீட்டு வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தன்னுடைய ஒண்ணரை வயது பெண்குழந்தை அபிக்கு உடல்நிலை சரியில்லாததால் அன்னத்திடம் சிறிது நேரம் பார்த்துக் கொள்ள உதவி கேட்கிறாள். லட்சுமி தன் மாமியாரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வருவதாக கூறினாள். அன்னமும் நான் பார்த்துக் கொள்கின்றேன் என கூறி அபியை வாங்கிக் கொள்கிறாள். குழந்தை அபி கட்டிலில் அழகாய் தூங்கிக் கொண்டிருக்கையில், இரவு முழுவதும் நண்பன் மூர்த்தியுடன் குடித்துவிட்டு, விடிந்த பின் உச்சி வெயிலில் தன் வீட்டிற்கு வந்த மாணிக்கம் அன்னத்திடம் தலை வலிக்குது டீ போடு என்றான். அன்னம் பால் வாங்கி வர கடைக்குச் செல்கிறாள். குழந்தையின் அருகில் தலையணையை போட்டு படுத்தான் மாணிக்கம். கட்டில் அசைவில் குழந்தைத் திரும்பி படுக்க, அதன் பிஞ்சுக் கால்கள் மாணிக்கத்தின் மீது விழுந்தது. அந்த பிஞ்சுக் கால்களை வருடிய மாணிக்கத்தின் உள்ளிருந்த மிருகம் விழித்துக் கொண்டது. பால் வாங்கிக் கொண்டு திரும்பி வருகையில் குழந்தையின்ன வீறிடல் சத்தம் கேட்க திடுக்கிடும் அன்னம் கதவை தட்டினாள் சிறிது நேரம் கழித்து திறந்த மாணிக்கம் அவசரமாய் சட்டையை மாட்டித் தனது வண்டியை எடுத்துக் கொண்டு சென்று விட்டான். குழந்தையை தூக்கிய அன்னம் துணுக்குற்றாள். குழந்தையை தூக்கிய இடக்கை முழுவதும் ரத்தம், என்ன செய்வது என்று திகைத்து நின்றாள். வெளியில் குரல் கேட்க, அது அபியின் அப்பா சுபாஷ், அண்ணா குழந்தையை படுக்க வெச்சிருந்தேன். கடையில போய் பால் வாங்கிட்டு வர்றதுக்குள்ள புள்ள இப்படி ரத்தமா கிடந்தாள் எனக்கு ஒண்ணுமே புரியல என்றாள் கண்களில் நீர் வழிதோடியது தன் தம்பி செய்த காரியத்தை தாயிடம் கூறிய போது தாய் வெள்ளையம்மாள் கூறிய பதிலில் உணவு உண்ணாமல் தனக்குத் தானே தண்டனைக் கொடுத்துக் கொண்டு வீட்டிலேயே சுடுக்கினாள். ஒருவாரமாக அன்னம் வேலைக்கு வராததால்

அவளைத் தேடி சகுந்தலாம்மாவும் சபேசன் சாரும் வந்தனர். அன்னத்தின் நிலையை பார்த்து சகுந்தலாம்மா எங்க வீட்டிற்க்கு அழைச்சிட்டுப் போரேன் என்று வெள்ளையம்மாளிடம் கேட்கிறாள். அவளும் சம்மதிக்கிறாள்.

வெள்ளையம்மாளின் நான்காவது மகள் விஜியும் தன் தம்பி செய்த மிருகத்தனமான செயலைப் பற்றி தாயிடம் நியாயம் கேட்கிறாள். தாய் வீட்டைவிட்டு வெளியே போகும்படி கூறிகிறாள். விஜி தன்னை விரும்பிய கிரியின் வீட்டிற்கு செல்கிறாள். கிரியின் அம்மா அவளை அன்போடு ஏற்றுக் கொள்கிறார். மறுநாளே கிரிக்கும் விஜிக்கும் திருமணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. விஜி சகுந்தலாம்மா வீட்டிற்கு வந்து அன்னத்திடம் கூறி அழைத்துச் செல்கிறாள். கோவிலில் திருமணம் முடிந்து திரும்பும் போது அங்கு வக்கீல் பிரகாஷ் சாரை சந்திக்கிறாள் அன்னம். பிரகாஷ் தன் காரில் அன்னத்தை வீட்டில் இறக்கி விடுவதாய் கூற தயங்கிய அன்னம், பின் பிரகாஷிடன் காரில் செல்கிறாள். காரில் போகும் பொழுது பிரகாஷ் கூறும் அறிவுரை அன்னத்திற்கு புது துணிவை கொடுக்கின்றது. தவறு செய்தவன் தம்பியே ஆனாலும் அவனுக்கு தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்ற முடிவுடன் வீட்டை நெருங்குகிறாள் அன்னம்.

வீட்டின் வாசலில் கிடந்த செருப்பைப் பார்த்ததும் நம் வீட்டு ஓனர் பேத்தி உமாவின் செருப்பாயிற்றே என்று நினைத்துக் கொண்டே அருகில் விளையாடி கொண்டிருக்கும் ஒரு பையனை அழைத்தாள். உமா எங்கடா என்று கேட்ட இப்பதான் மாணிக்கம் மாமா வீட்டிற்குள் கூட்டிட்டுப் போச்சு என்றும் சற்றும் தாமதியாமல் வீட்டின் கதவை வேகமாக தட்டினால். யாரது என்ற கேட்டுக் கொண்டே மாணிக்கம் திறக்கிறான் கதவைத் திறக்கிறான். தோளில் உமாக்குட்டி, கிடப்பதைக் கண்ட அனனம் கோபத்தின் உச்சிக் கொண்டு சென்றாள். அன்னத்தைக் கண்டதும் தாவி அவனுடைய ஒன்று மறியே அந்தப் பிஞ்சுக் குழந்தை பாசத்தோடு இறங்கி அன்னத்தின் காலைக் கட்டிக்கொண்டது. உமாக்கு இப்படி யார் கூப்பிட்டாலும் இப்படி வரக்கூடாது என்று அன்று அதர்பான கண்டிப்புடன் சொல்லி குழந்தையை அனுப்பி விட்டு, அருகில் இருந்த கிரிக்கெட் மட்டையை கையில் எடுக்கிறாள். முதலில் தவறு செய்யும் போதே தாய் கண்டிருந்தால் கண்டிக்காததால் தான் இன்னொரு குழந்தையை நெருங்கி இருக்க மாட்டாய் இருக்கிறாய் என்று வெறியோடு அவன் காலையும், இடுப்பையும் உடைத்து விடுகிறாள். இனியொரு பெண்ணின் வாழ்க்கையை சீரழிவுக்கு காரணமாக இருக்கும் அந்த மிருக்கத்திற்க ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறாள். ஊனத்துடன், உயிருடன் இருந்து தான் செய்யத் தவறை நினைத்து நினைத்து மனம் வருந்தறும், இயலாமையால் ஒவ்வொலு நாளும் அவன் துன்பப்பட வேண்டும் என்று அவனை உயிருடன் விட்டு விடுகிறாள். "நெஞ்சு பொறுக்குதில்லையே" நாவலின் கதைச் சுருக்கமாகும்.

## ஆண்மகன் மீது வெள்ளையம்மாள் கொண்ட பாசம்

ஆண்மகன் மீது அம்மா கொண்டுள்ள பாசம். பெண்குழந்தை பிறந்து விட்டதே என்று வெறுப்படைந்த தந்தைகள் வாழும் உலகத்தில் பெண் குழந்தைகளுக்கு என்று நிம்மதி கிடைக்கப் போன்றது. காலம் காலமாக நம் சமுதாயத்தில் ஆண் குழந்தைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. வளர்க்கப் பிறந்தவன். எனக்கு கடைசி காலத்தில் கஞ்சி ஊத்தப் போகிறவன் என்று அவனைத் தலையில் வைத்துக் கொண்டாடும் வழக்கம் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. தாய் வெள்ளையம்மாள் மட்டும் விதிவிலக்கா. குடும்பத்திற்காக உழைக்கும் மகள் ஒரு வாய் சாப்பிட்டாளா? என்று கூட கேட்காத தாய், மகள் அன்னத்திடம்

அவள் வேலை செய்யும் வீட்டில் ஏதேனும் காலை உணவு கிடைத்தால் தம்பிக்கு கொண்டு வந்து கொடு என்று கூறுவதைக் என்று அன்னம்.

**"அம்மா நான் போயிட்டு வற்றேன்"**

**"ம். . . . பாத்திரம் எடுத்திட்டியா?"**

**"எடுத்துக்கிட்டேன்"**

***"டிபன் எதுவும் கிடைச்சா சிரமம் பார்க்காம ஒருநடை ஆட்டுக்கு வந்துட்டுப்போ! சின்னவன் சூடாச்சாப்பிட ஆசைப்படுவான்"***

***(ப.68)***

தன் மகனுக்கு என்று சொல்லும் ஆண் மகன்கள் வளர்த்து ஆளாக்க நினைக்கும் ஒரு தாயின் மனம். நல்லவனா? கெட்டவனா? என்பது அறியாத ஆண்மகன்கள் என்று கூறுகின்ற தாயின் மனப்போக்கு பழைமையில் ஊரில் அவள் மனம் மகனே தன்னை கடைசி வரைத் தாங்குவான் என்ற அவளின் எண்ண ஓட்டம் தனக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை மகள்களின் உழைப்பில் சிறுகச் சிறுகச் சேமித்து கழுத்திற்கு ஒரு சிறு நகை வாங்கி தங்கைக்கு அணிய வேண்டும் என்ற அன்னத்தில் எண்ணத்தை அடியோடு அழிப்பதால் உள்ளது. தம்பி மாணிக்கம் அக்காவின் சீட்டுப் பணத்திற்குத் தயாராய் செலவு வைத்து பேச்சை ஆரம்பிக்கின்றான்.

***"என் வயசுப்பயக எல்லாம் விதவிதமா பைக்ல சுத்திட்டு இருக்கானுங்க. நான் மட்டும் இந்த ஓட்ட சைக்கிள்ல போகணுமா? என்று தம்பி கேட்க அதற்கு, உன் படிப்பிற்கு மட்டும் தான் எங்களால் உழைச்சு கொட்ட முடியும். உன் ஆடம்பர செலவுக்கு நீ தான் சம்பாதிக்கணும்னு சொல்லும்மா" என்று அன்னம் கூற அதனைக் கேட்ட மாணிக்கத்தின் முகம் கடுகடுத்தது.***

***(ப.74)***

குடும்ப நிலையை எடுத்துக் கூறும் மகளை விட எங்கே தன் மகனின் ஒற்றைக் குடும்பம்தனிலே பொருள் ஓங்கே வைப்பவன்தந்தை - மற்றைய கருமங்கள் செய்து மனை வாழந்து செய்யவள் அன்னை ஆசை நிறைவேற்றாமல் போய் விடுமோ என் ஏங்குகிறாள். திருமணவயதைத் தாண்டி நிற்கும் மகன்களின் வாழ்க்கையைப் பற்றி கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்காத தாய், அதற்கு இதோ மகள் அன்னத்திடம் தாய் கூறும் பதில், *"அன்னம்! இப்ப என்ன? நம்ம வீட்ல இருக்கிற ஒத்த ஆண்பிள்ளை இவன் தான். இவன் சோக்காலி பசங்க மாதிரி இவனும் பைக் வாங்க ஆசைப்படுறான். வாங்கிட்டு போகட்டுமே!" (ப.76)* என்று மகன் மீது கொண்ட பாசத்தால் மகளிடம் கூறகின்றாள்.

பழைமை வாதியாய் ஆண் வாரிசு தான் பெரியது என்றும், அவர்களே உலகம் என்றும் வாழுகின்ற வெள்ளையம்மாள் போன்று இன்றும் நிறைய பெண்கள் வாழ்கின்றனர். இந்த சமுதாயம் பெண்ணிற்கு எப்போது முக்கியத்துவம் தரும். வெள்ளையம்மாள் போன்ற தாய்மார்கள் இருக்கும் வரை ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலை உருவாவதற்கு வாய்ப்பில்லை என்றே கூறலாம்.

## குடும்பத்தையே தன் தலையில் சுமக்கும் அன்னம்

அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து குளித்து தயாராகித் தன் வீட்டிற்கு அடுத்த தெருவில் இருக்கும் பங்களாக்களில் வாசல் தெளித்து கோலம் போடுவது, நான்கு வீடுகளில் துணி துவைப்பது, வீட்டைத் துடைப்பது என்று விடியும் முன் துவங்கும் அவளது பணி இரவு வரை நீட்டித்தாலும் அலுப்போ சலிப்போ இல்லாமல் உழைப்பவள் அன்னம்.

தான் வேலை செய்யும் ஒரு வீட்டின் காவலாளி பீடி பிடித்துக் கொண்டு வீட்டின் அருகில் வருவதை பார்த்த அன்னம், *அண்ணே ஏன் இப்படி இதை குடிச்சு உடம்ப கெடுத்துக்கறீங்க என்கிறாள் அதற்கு "அடப்போம்மா! நீ கூடத்தான் கால நேரம் பார்க்காம உழைக்கிற? என்னத்த சேர்த் திட்ட? ஒரு கல்யாணம் காட்சி உண்டா?*

காவலாளியின் வார்த்தையில் அக்கறையும் வருத்தமும் சேர்ந்தே ஒலித்தது ஏழைகளின் வீட்சுடுப் பெண்புள்ளை திருமணமாகாது, முதிர்கன்னிகளாக வாழும் அவல நிலையை காவலாளி மூலம் எடுத்துரைப்பதாக காணலாம் இருந்தாலும் அதற்கு அவள் கூறும் பதில் "என் அம்மாவை ஒக்கார வெச்சு சாப்பாடு போடுறேன். யார்கிட்டயும் பத்து பைசா கடன் வாங்காம அக்காவை கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டோம். தம்பியை படிக்க வைக்கிறேன். இதைவிட வேறென்ன சந்தோஷம் வேணும் எனக்கு?" உள்ளது என்று கூறுகிறாள். (ப.70) ஆணுக்குப் பெண் இங்கு இழைப்பில்லை காண் என்று கும்மியடி என்று பாரதியின் கற்றுகிணங்க ஒரு குடும்பத்தை காப்பாற்றும் சக்தி பெண்களிடம் உள்ளது என்பதற்கு எடுத்துக் காட்டாக அன்னம்.

தனக்கு என்று எந்த சந்தோஷமும் பெரிதல்ல, தன் குடும்பமே பெரிது என்று எண்ணி, வாழும் அன்னம் போன்ற எண்ணம் கொண்ட பெண்கள் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். புறக்கணிக்கப்படும் பெண் அவள். உணர்வுகளைப் பற்றி கவலைப்படாத சமூகம்.

அன்னம் என்றும் தன் குடும்பத்திற்கும், பிறருக்கும் முடிந்தவரை உதவி செய்யும் குணம் உடையவள். எதிர்வீட்டு லட்சுமி அக்கா தன் குழந்தை அபியை பார்த்துக் கொள்ள முடியுமா என அன்னத்திடம் கேட்டாள். அன்னம் தான் பார்த்துக் கொள்வதாய் கூறி அபியை வாங்கிக் கொள்கிறாள்.

குழந்தை தூங்கிவிட அதை கட்டிலில் படுக்க வைத்த நேரம் தம்பி மாணிக்கம் வருகிறான்." தலைவலிக்குத டீ போடு என்று கூறியவனிடம் பால் இல்லை வாங்கியா என்று அன்னம் கூற, நீயே வாங்கி வா என்றான் தம்பி. சரி குழந்தை தூங்கிக் கொண்ட இருக்கிறது. அழுதாள் இந்சுத பால் புட்டியை கொடு என்று கூறிவிட்டு பால் வாங்க சென்றாள் அன்னம். (ப.91)

வேலை வெட்டியில்லாத அதிகாரம் படைத்த தம்பி, குடும்பத்தை நினைத்து தன் வாழ்க்கையைத் தியாகம் செய்த அன்னம், வீட்டிற்கு பொறுப்பான பெண்பிள்ளை. மாணிக்கத்திற்கு அளவுக்கதிகமாய் கொடுக்கப் பட்ட செல்லம். சேரக்கூடாத நண்பர் கூட்டம், கற்றுக்கொண்ட மோசமான பழக்கங்கள் என காட்டு மிருகத்தை விட மோசமாய் மாறிவிட்டிருந்த மிருகம் அந்த பிஞ்சுக் குழந்தையை தன்னோடு சேர்ந்து அணைத்துக் கொண்டது. (ப.92)

பால் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு திரும்பிய அன்னம் குழந்தையின் அழுகை நிற்காமல் போகவே குழந்தையை தூக்கினால், குழந்தையை பற்றியிருந்த இடக்கரம் முழுக்க ரத்த பரவ உடல் முழுக்க சில்லிட்டுப் போனது.

மருத்துவமனைக்கு அபியின் அப்பாவுடன் சென்ற அன்னம் இரவானதும் வீடு திருமபுகிறாள். வீட்டிற்கு வந்தவுடன்தன் தாயிடம், "உம்புள்ளை எங்கே?". (ப.96)

அவனை ஏன் தேடுற என்ற தாயிடம் அன்னம், ஒரு பச்சைமண்ணை... அதுவும் நாலுநாளா காய்ச்சல்ல கிடந்த சிசுவை இரக்கமே இல்லாம உம்மகன் நாசமாக்கிட்டான்" (ப.97) என்று ஆவேசத்துடன் கூறுகிறாள்.

"அன்னம் தம்பி காலையில வீட்டுக்கு வந்ததை யார் கிட்டயாவது சொல்லிட்டியா?" என்றுதாய் வெள்ளையம்மாள் கேட்கிறாள்.

"இல்ல, ஏன் கேட்கிற?

"நல்ல வேலை செய்தடி... நீ மட்டும் யார் கிட்டயாவது உளறியிருந்தால என்ன ஆகியிருக்கும் எம்புள்ளையோட கதி." (ப.97)

"இல்ல அவன் மனுஷனே இல்லமிருகம் அந்த மிருகத்தை இனியும் வெளியே விட்டால் எந்தப் பெண்ணையும் விடமாட்டான்.

"ஏய் வாய் கூசாம பேசாதடி?

"உனக்குதாம்மா கூசனும். இப்படிபட்ட புள்ளைய பெத்ததுக்காக... அவனை தப்பிக்கவைக்கணும்னு நினைக்கிறியே (ப.97)

சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்று சமூகம் உயர்த்திப்பிடிக்கும் செயல்

இன்றும் மாறவில்லை. தாய் கொடுக்கும் செல்லத்தால் தறுதலையாகப் போகும் ஆண்பிள்ளைகள், மூர்க்கத்தனமான குணம் கொண்டவனாகத் தம்பி இருப்பதை வெறுக்கும் அக்கா அன்னம். இந்தச் சமூகத்தில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இலலை என்பதை இக்கதை எடுத்துக் கூறுகின்றது.

## தங்கை விஜயலட்சுமி தவறை தட்டிக் கேட்கும் தைரியம்

பிள்ளைப்பாசம் தாயின் கண்ணை மறைக்கிறது. "நமக்கு எமன் வெளியே இருந்து வரவேண்டாம் வீட்லயே வளர்த்து வெச்சிருக்க"(ப.107) பெற்ற தாயிடம் விஜயலட்சுமி வாதாடுகின்றாள். ஒண்ணரை வயசுப் பிள்ளையைச் சீரழித்து வந்திருக்கும் தன் மகனுக்கு அன்பான உபசரிப்பாய் சாப்பாடு போடுகின்ற வெள்ளையம்மாள் போனற பெண்கள இருக்கும் வரை சில ஆண்பிள்ளைகளைத் திருத்தவே முடியாது. பெண்களுக்குப் பெண்களே எதிரி என்பதனை இக்கதை உணர்த்துகிறது.

"தப்பு பண்ணிடோம்ங்கிற எண்ணமோ, குற்ற உணர்ச்சியோ அவன்கிட்ட கொஞ்சம் கூட இல்லக்கா. இந்த அம்மாவுக்கு கூட அந்த உணர்வு இல்ல. அவனை நடுவீட்ல உட்காரவெச்சு கறிசோறு போடுறாங்க ச்சே" (ப.108) என்று தங்கை விஜயலட்சுமி அக்கா அன்னத்திடம் கூறுவதன் மூலம் உணர முடிகின்றது. அதே நேரத்தில் சூப்பர்வைசர் கிரி என்ற ஆண்மகன் வீட்டில் விஜயலட்சுமி தஞ்சம் புகுந்து இரவு முழுவதும் பாதுகாப்புடன் இருந்தது, கிரி போன்று நல்ல ஆண்மகன்கள் சமூகத்தில் இருக்கின்ற காரணத்தால் பெண்கள் தன்னம்பிக்கையுடன் சுதந்திரமாக உலவ முடிகின்றது. தகப்பனையும், கணவனையும், கடைசியில் மகனையும் சார்ந்து வாழும்சார் புண்ணியாக சமூகத்தில் பெண்கள் பார்க்கப் படுகின்றாள். எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேறினாலும், அவளுக்கு (பெண்மை) கற்பு நெறியில் உடலாலும், மனதாலும் பாதிப்புக்குள்ளாகின்றாள். தன் மகன் சின்னச் சின்ன தவறுகள் செய்கிறான். ஒரு வேலைக்குப் போனால் சரியாகி விடுவான் என்று முதன் முறையாய் யோசிக்கத் துவங்கினாள்.(ப.97) தன் மகன் மீண்டும் அதே தவறைச் செய்யும் போதுமகன் அன்னத்தால் தண்டிக்கப் படுகின்றான். நடக்க முடியாதவாறு தம்பியின் காலையும், இடுப்பையும் உடைக்கிறாள்.

## முடிவுரை

தவறு செய்யும் ஓர் ஆண்மகனைத் தண்டிக்கும் மன உறுதி இன்றைய பெண்களுக்கு வந்துவிட்டது என்பதை தலைமைப் பாத்திரம் அன்னத்தின் செயல் மூலம் அறிய முடிகின்றது. அன்னத்தின் தாய் போன்ற பெண்கள் இருக்கின்ற காரணத்தால் சில ஆண்மகன்கள் நெறி தவறிப்போய் வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். பெண்கள் கல்வி கற்று வெளி உலக அறிவுப் பெற்ற பின்புதான் மனதில் தைரியம் வந்தது என்றே கூறலாம். "பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் ஈசன், மண்ணுக்குள்ளே சில மூடர் நல்மாதர் அறிவைக் கெடுத்தனர்" என்ற பாரதியின் கூற்று இன்று பழமையாகிவிட்டது என்றே கூறலாம். சமூகத்தில் அநீதிகளைத் தட்டிக் கேட்கும் மன தைரியம் இன்றைய பெண்களிடம் வந்து விட்டது. நம் சமுதாயத்தில் புரையோடிப் போய் இருக்கும் பெண் குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை நிகழ்வு இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. தவறு செய்து தம்பியே ஆனாலும் அதை துணிவுடன் எதிர்த்து தண்டனை கொடுத்தவள் கல்வியறிவு இல்லாவிட்டாலும் தனித்து நின்று குடும்பப் பொறுப்புகளை கவனித்து கொண்ட அன்னம் போன்ற பல பெண்கள் இந்த சமூகத்தின் உயிர் சத்தியாக உள்ளனர். சமூகத்தில் பெண் குழந்தைகளுக்கு ஏற்படும் அவலங்களைக் கண்டு நெஞ்சு பொறுப்பதில்லையே என்று ஆசிரியர் நடை அழகின் வழி வெளிக்காட்டியுள்ளார்.